**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,**

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 05 ஆம் நாள் புதன்கிழமை

**இ.ம.எண்.7/2025**

IN

**அசல் வழக்கு எண்.239/2011**

1. முருகலட்சுமி
2. கோட்டைத்தாய்
3. பேச்சியம்மாள் ....மனுதாரர்கள்/6,7,8 பிரதிவாதிகள்

/எதிர்/

1. பொன்னுத்தாய்
2. கருப்பசாமி
3. தங்கம்
4. சாந்தி ....1 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/ 2 முதல் 5 வாதிகள்
5. மாரிமுத்து
6. முத்தையா
7. சொர்ணத்தாய்
8. நடராஜன்
9. முருகன் ....5 முதல் 9 எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 5 பிரதிவாதிகள்

இம்மனுவானது 24.10.2025 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.வைரமுத்து அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.ரவிசங்கர் அவர்கள் ஆஜராகியும், 7ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.D.கோட்டூர்முருகன் அவர்கள் ஆஜராகியும், 5, 6, 8 மற்றும் 9 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் தோன்றாத் தரப்பினர்களாக உள்ள காரணத்தினால் இம்மனுவை பொறுத்து தோன்றாத்தரப்பினர்களாக

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.11.05 17:21:30 +0530

கருதப்பட்டும், 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவிற்கு No Counter allowed on terms என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ள நிலையிலும், 7ம் எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவிற்கு No Counter என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ள நிலையிலும், மனு மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், மனுதாரர் தரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

மனுதாரர்களால் இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 7 மற்றும் பிரிவு 151–ன் கீழ், மனுதாரர்கள் கடந்த 26.09.2025 அன்று ஆஜராகாததால் மனுதாரர்கள் மீது ஒருதலைபட்சமாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்து வழக்கினை மேல்நடத்தி கொள்ள உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்:–**

இம்மனுவின் 1ம் மனுதாரர் அசல் வழக்கில் 6ம் பிரதிவாதி என்றும், பிரதான வழக்கினை எதிர்மனுதாரர்கள் பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்திருந்தார்கள் என்றும், மேற்படி பிரதான வழக்கில் மனுதாரர்களும் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி மேல்நடத்தி வந்ததாகவும், இந்நிலையில் மேற்படி வழக்கானது கடந்த 05.06.2016 அன்று தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதாக விபரம் தெரிந்ததால் மனுதாரர்கள் எவ்வித மேல்நடவடிக்கையும் எடுக்காமல் இருந்து வந்ததாகவும், 1ம் மனுதாரரும் அவரது மற்றொரு சகோதரியான கோட்டைத்தாய் என்பவரும் தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் குடியிருந்து வருவதாகவும், 1ம் மனுதாரரின் மற்றொரு சகோதரியான பேச்சியம்மாள் என்பவர் விளாத்திகுளத்தில் குடியிருந்து வருகிறார் என்றும், மேற்படி விபரங்கள் அனைத்தும் பிரதான வழக்கில் வாதிகளுக்கு நன்கு தெரியும் என்றும், ஆனால் அதனை மறைத்து வாதிகள் மனுதாரர்கள் தென்காசி மாவட்டம், திருவேங்கடம் வட்டம், பெருங்கோட்டூர் கிராமத்தில் குடியிருந்து வருவதாக பொய்யான முகவரியை இந்நீதிமன்றத்திற்கு தெரிவித்து மனுதாரர்களுக்கு

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.11.05 17:21:36 +0530

அழைப்பாணை மற்றும் நோட்டீஸ் அனுப்பியது போன்று விபரித்து அதில் மனுதாரர்கள் ஆஜராகவில்லை என்று கூறி அதனால் தென்காசி மாவட்டத்தில் பிரசுரம் ஆகும் தினசரி பத்திரிக்கையில் விளம்பரம் செய்வது போன்று பொய்யாக விபரித்து அதன்பேரில் மனுதாரர்களை பொறுத்து கடந்த 26.09.2025 அன்று மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைபட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், அதுபற்றிய விபரத்தை வாதிகள் வெளிப்படையாக மனுதாரர்கள் உறவினர்களிடம் தெரிவித்துள்ளார்கள் என்றும், அதன் அடிப்படையில் மேற்படி வழக்கு பற்றிய விபரத்தை மனுதாரர்கள் தங்கள் வழக்கறிஞர் மூலம் இந்நீதிமன்றத்தில் பார்வையிட்ட பொழுது தான் மேற்படி விபரங்கள் அனைத்தும் மனுதாரர்களுக்கு தெரியவந்தது என்றும், மேலும் பத்திரிக்கை விளம்பரம் செய்ய வகுக்கப்பட்ட 15 நாள்கள் காலஅவகாசம் கூட இல்லாமல் அவசரகதியில் பத்திரிக்கையில் விளம்பரம் செய்யப்பட்டுள்ள விபரமும் மனுதாரர்களுக்கு தெரியவந்தது என்றும், மேலும் மனுதாரர்களது சகோதரரும், 5ம் பிரதிவாதியுமான முருகன் என்பவர் வெளிநாட்டில் பணிபுரிந்து வரும் நிலையில் அதுபற்றிய விபரங்கள் வாதிகளுக்கு தெரிந்திருந்தும் அதனை மறைத்து வாதிகள் அவருக்கும் பெருங்கோட்டூர் கிராமத்தில் குடியிருந்து வருவதாக தெரிவித்து பத்திரிக்கையில் விளம்பரம் செய்துள்ளது சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும், மேற்கண்ட பிரதான வழக்கில் கண்ட வாதிகள் மனுதாரர்களுக்கு நெருங்கிய உறவினர்கள் என்றும், மேலும் மனுதாரர்கள் எங்கு குடியிருக்கிறோம் என்ற விபரமும், 5ம் பிரதிவாதி வெளிநாட்டில் பணிபுரிந்து வரும் விபரமும் வாதிகளுக்கு தெரிந்திருந்தும் அதை இந்நீதிமன்றத்தில் தெரிவிக்காமல் மறைத்து போலியாக பெருங்கோட்டூர் கிராமத்தில் குடியிருந்து வருவதாக தெரிவித்து மனுதாரர்கள் அனுப்பி உள்ள அழைப்பாணை மற்றும் பத்திரிக்கை விளம்பரம் செய்துள்ளது சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும், அதனை அனுசரித்து இந்நீதிமன்றம் மனுதாரர்களுக்கு எதிராக கடந்த 26.09.2025 தேதியில் உத்தரவு பிறப்பித்துள்ளது ரத்து செய்யப்பட வேண்டியதாய் உள்ளது என்றும், ஆகையால் மனுதாரர்கள் கடந்த 26.09.2025 அன்று ஆஜராகாததால் மனுதாரர்கள் மீது ஒருதலைபட்சமாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ரத்து

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.11.05 17:21:42 +0530

செய்து வழக்கினை மேல்நடத்தி கொள்ள உத்தரவிடக்கோரி இம்மனு மனுதாரர்கள் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இம்மனுவின் 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞரால் இம்மனுவிற்கு No Counter allowed on terms எனவும், 7ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞரால் இம்மனுவிற்கு No Counter எனவும் மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

3) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர்கள்/6, 7, 8 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, அசல் வழக்கு கோப்பு மற்றும் மனுதாரர்கள் தரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) இம்மனுவானது மனுதாரர்கள்/6, 7, 8 பிரதிவாதிகளால், மனுதாரர்கள் கடந்த 26.09.2025 அன்று ஆஜராகாததால் மனுதாரர்கள் மீது ஒருதலைபட்சமாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்து வழக்கினை மேல்நடத்தி கொள்ள உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

6) இம்மனுவின் மனுதாரர்கள்/6, 7, 8 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கானது கடந்த 05.06.2016 அன்று தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதாக விபரம் தெரிந்ததால் மனுதாரர்கள் எவ்வித மேல்நடவடிக்கையும் எடுக்காமல் இருந்து வந்ததாகவும், 1ம் மனுதாரரும் அவரது மற்றொரு சகோதரியான கோட்டைத்தாய் என்பவரும் தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் குடியிருந்து வருவதாகவும், 1ம் மனுதாரரின் மற்றொரு சகோதரியான பேச்சியம்மாள் என்பவர் விளாத்திகுளத்தில் குடியிருந்து வருகிறார் என்றும், மேற்படி விபரங்கள் அனைத்தும் பிரதான வழக்கில் வாதிகளுக்கு நன்கு தெரியும் என்றும், ஆனால் அதனை மறைத்து வாதிகள் மனுதாரர்கள் தென்காசி மாவட்டம், திருவேங்கடம் வட்டம், பெருங்கோட்டூர் கிராமத்தில் குடியிருந்து வருவதாக பொய்யான

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.11.05 17:21:49 +0530

முகவரியை இந்நீதிமன்றத்திற்கு தெரிவித்து மனுதாரர்களுக்கு அழைப்பாணை மற்றும் நோட்டீஸ் அனுப்பியது போன்று விபரித்து அதில் மனுதாரர்கள் ஆஜராகவில்லை என்று கூறி அதனால் தென்காசி மாவட்டத்தில் பிரசுரம் ஆகும் தினசரி பத்திரிக்கையில் விளம்பரம் செய்வது போன்று பொய்யாக விபரித்து அதன்பேரில் மனுதாரர்களை பொறுத்து கடந்த 26.09.2025 அன்று மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைபட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், அதுபற்றிய விபரத்தை வாதிகள் வெளிப்படையாக மனுதாரர்கள் உறவினர்களிடம் தெரிவித்துள்ளார்கள் என்றும், அதன் அடிப்படையில் மேற்படி வழக்கு பற்றிய விபரத்தை மனுதாரர்கள் தங்கள் வழக்கறிஞர் மூலம் இந்நீதிமன்றத்தில் பார்வையிட்ட பொழுது தான் மேற்படி விபரங்கள் அனைத்தும் மனுதாரர்களுக்கு தெரியவந்தது என்றும், மேலும் பத்திரிக்கை விளம்பரம் செய்ய வகுக்கப்பட்ட 15 நாள்கள் காலஅவகாசம் கூட இல்லாமல் அவசரகதியில் பத்திரிக்கையில் விளம்பரம் செய்யப்பட்டுள்ள விபரமும் மனுதாரர்களுக்கு தெரியவந்தது என்றும், மேலும் மனுதாரர்களது சகோதரரும், 5ம் பிரதிவாதியுமான முருகன் என்பவர் வெளிநாட்டில் பணிபுரிந்து வரும் நிலையில் அதுபற்றிய விபரங்கள் வாதிகளுக்கு தெரிந்திருந்தும் அதனை மறைத்து வாதிகள் அவருக்கும் பெருங்கோட்டூர் கிராமத்தில் குடியிருந்து வருவதாக தெரிவித்து பத்திரிக்கையில் விளம்பரம் செய்துள்ளது சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும், மேற்கண்ட பிரதான வழக்கில் கண்ட வாதிகள் மனுதாரர்களுக்கு நெருங்கிய உறவினர்கள் என்றும், மேலும் மனுதாரர்கள் எங்கு குடியிருக்கிறோம் என்ற விபரமும், 5ம் பிரதிவாதி வெளிநாட்டில் பணிபுரிந்து வரும் விபரமும் வாதிகளுக்கு தெரிந்திருந்தும் அதை இந்நீதிமன்றத்தில் தெரிவிக்காமல் மறைத்து போலியாக பெருங்கோட்டூர் கிராமத்தில் குடியிருந்து வருவதாக தெரிவித்து மனுதாரர்கள் அனுப்பி உள்ள அழைப்பாணை மற்றும் பத்திரிக்கை விளம்பரம் செய்துள்ளது சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும், அதனை அனுசரித்து இந்நீதிமன்றம் மனுதாரர்களுக்கு எதிராக கடந்த 26.09.2025 தேதியில் உத்தரவு பிறப்பித்துள்ளது ரத்து செய்யப்பட வேண்டியதாய் உள்ளது என்று காரணம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7) மனுதாரர்களால் இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆதார் அட்டைகளின் ஒளிநகல்களின் பரிசீலனையில் இருந்து, 1ம் மனுதாரரும்

ALIMA M Digitally signed by ALIMA M
Date: 2025.11.05 17:21:56 +0530

அவரது மற்றொரு சகோதரியான 2வது மனுதாரர் கோட்டைத்தாய் என்பவரும் தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் குடியிருந்து வருவதையும், 1ம் மனுதாரரின் மற்றொரு சகோதரியான 3வது மனுதாரர் பேச்சியம்மாள் என்பவர் விளாத்திகுளத்தில் குடியிருந்து வருகிறார் என்பதையும் இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது. ஆகையால் மனுதாரர்களால் இம்மனுவில் கூறப்படும் காரணம் இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது.

8) மேலும், மனுதாரர்களின் இம்மனுவிற்கு 1 முதல் 4 மற்றும் 7வது எதிர்மனுதாரர்கள் தரப்பில் No Counter என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே, அசல் வழக்கில் முழுமையான நீதிமுறை தீர்மானிப்பிற்கு அசல் வழக்கில் மனுதாரர்கள்/6, 7, 8 பிரதிவாதிகள் ஆஜராகி தங்களது தரப்பு வழக்கை எடுத்துரைக்க வாய்ப்பு வழங்கப்பட வேண்டியது அவசியம் என்பதால் இம்மனுவானது நீதியின் நலன் கருதி அனுமதிக்கப்பட்டு இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

**9) இறுதியாக**

இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 05ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.11.05 17:22:04 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :-** – இல்லை –

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.11.05 17:22:09 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

முு.மா.உ. நீதிமன்றம்,
சங்கரன்கோவில்,
I.A.No.07/2025
in
O.S.No.239/2011
உத்தரவு (Draft / Fair)

நாள் : 05.11.2025